நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் : 27.11.2020

2020-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 -ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 04.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் அக்டோபர் 2020-ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 467 பதிவு செய்யப்பட்டது. நாள் 30.11.2020

**பொருள் : 2**

இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2020-ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 468 பதிவு செய்யப்பட்டது. நாள் 30.11.2020

**பொருள் : 3**

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். 1805/2020/ஈ.மா.2 நாள்.28.10.2020-இன்படி சத்தியமங்கலம் நகராட்சி, சத்தியமங்கலம் கிராமம், நகரளவு வார்டு- D, பிளாக்கு-1, நகராளவு எண். 9/4 (பழைய க.ச.எண்.3098/2pt)-ல் அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தின்படி விவசாய பயன்பாட்டு பகுதியாக உள்ளது. மேற்கண்ட இடத்தின் பயன்பாட்டினை தொழிற்சாலை பகுதியாக மற்றியமைக்க நில உபயோக மாற்றத்திற்கான ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகள் ஏதுமிருப்பின் பொது மக்களிடமிருந்து பெறும் பொருட்டு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்ட செய்தித்தாள் விவரம் அதனுடன் நகராட்சியின் தீர்மான நகல், Check List மற்றும் நில உபயோகக் கட்டணம் ஆகியவற்றினை அனுப்புமாறு தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட இடத்தின் நில உபயோக மாற்றம் செய்வது குறித்தும் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக அரசு செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு வழியாக தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கு ஏற்படும் உத்தே செலவினம் ரூ.50000/- செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலுத்தப்பட்டு அச்செலவு தொகையினை இட உரிமையாளரிடமிருந்து வசூல் செய்யப்பட்டு பொது நிதியில் வரவு வைக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1047/2020/F1)

தீர்மானம் எண் : 469 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 4

சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN 36 AZ 8821 குடிநீர் டேங்கர் லாரிக்கு 2020-2021 ஆம் ஆண்டு (1-2021 to 12-2021) காலத்திற்கு காப்பீடு பிரீயம் (Insurance Preium) செலுத்தப்பட வேண்டும் என்று குடிநீர் டேங்கர் லாரி ஒட்டுநர் திரு.எஸ்.கே.பழனிசாமி அவர்களின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே,வாகனம் காப்பீடு பிரீயம் செலுத்த உத்தேச தொகை ரூ.50000/- தொகை செலவு ஆகும்.இச்செலவினத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியல் சேர்த்துகொள்ளலாம்.
3)குடிநீர் பணி அவசியம் கருதி நகர் மன்ற முன் அனுமதி பெற்று தொகை செலுத்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

(ந. க. எண்.1356/2020/இ1)

தீர்மானம் எண் : 470 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 5

சத்தியமங்கலம் நகராட்சி துாய்மை இந்தியா திட்டம் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக (ODF Plus) அறிவிக்கை செய்ய இந்நகர் மன்றம் முதன்மை தீர்மானம் நிறைவேற்றியது இத்தீர்மானத்தின் மீது பொது மக்களின் கருத்துகள் மற்றும் ஆட்சேபணைகள் கோரி 03.11.2020-ம் தேதி தினமலர் நாளிதழ் பக்கம் 5-ல் மற்றும் மாலைமுரசு நாளிதழ் பக்கம் 3-ல் அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. 03.11.2020 அன்று முதல் 15 தினங்களுக்குள் எவ்வித கருத்துகள் மற்றும் ஆட்சேபணைகள் பொது மக்களிடமிருந்து நகராட்சிக்கு வரப்பெறவில்லை.

துாய்மை இந்தியா திட்டம் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக (ODF Plus) அந்தஸ்து பெற இறுதி தீர்மானம் வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக (ODF Plus) அந்தஸ்து பெற தொடர் நடவடிக்கை மேற்கொள்ள நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண்.1188/2020/எச்.1)

தீர்மானம் எண் : 471 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 6

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இறைச்சி இனவிற்பனை செய்யும் உரிம இனங்கள், வரும் 31.03.2021 உடன் உரிமக் காலம் முடிவடைவதால், அரசாணை எண். (நிலை) 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள். 03.07.2007-இன்படி மேலும் நீடித்துக் கொள்வது குறித்து விருப்ப படிவம் பெறப்பட்டது. அதன்படி உரிமக்கட்டணம் மற்றும் ஆண்டு வாடகை முன் வைப்புத் தொகையாக பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டு முடிய அதே உரிமைதாரருக்கு நீடிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | வரிவிதிப்பு எண் | உரிம ஏலதாரரின் பெயர் | பழைய ஆண்டு வாடகை | 5% உயர்வு செய்த பின் ஆண்டு வாடகை | நீடிப்பு செய்து வழங்கும் வாடகை காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஒன்னேகவுடர் மூலை ஆட்டு இறைச்சி விற்பனை உரிமம் | 061/14 | எம். சரவணக்குமார் | 39,424 | 45,538 | 01.04.2021 to 31.03.2024 |
| 2 | அத்தாணி ரோடு சுவாதி ரைஸ்மில் அருகில் ஆட்டு இறைச்சி விற்பனை உரிமம் | 061/15 | எஸ்.கிருஷ்ணசாமி | 23,000 | 26,450 | 01.04.2021 to 31.03.2024 |
| 3 | வார்டு எண். 5 திப்பு சுல்தான் ரோடு பகுதியில் கோழி இறைச்சி விற்பனை உரிமம் | 061/73 | எம். சரவணக்குமார் | 32,200 | 37,030 | 01.04.2021 to 31.03.2024 |
| 4 | வார்டு எண். 4 திப்பு சுல்தான் ரோடு பகுதியில் கோழி இறைச்சி விற்பனை உரிமம் | 061/71 | பரமேஸ்வரன் | 34,500 | 39,675 | 01.04.2021 to 31.03.2024 |
| 5 | வார்டு எண்.2 கொளத்துார் ரோடு பகுதியில் கோழி இறைச்சி விற்பனை உரிமம் | 061/72 | ஆர். விவேகானந்தன் | 47,610 | 54,752 | 01.04.2021 to 31.03.2024 |
| 6 | அத்தாணி ரோடு சுவாதி ரைஸ் மில் அருகில் கோழி இறைச்சி விற்பனை உரிமம் | 061/82 | கே. செல்வகுமார் | 34,500 | 39,675 | 01.04.2021 to 31.03.2024 |
| 7 | வார்டு எண். 27 மைசூர் டிரங்ரோடு எஸ்.ஆர்.டி கார்னர் பகுதியில் கோழி இறைச்சி விற்பனை உரிமம் | 061/84 | பி. பாலசுப்பிரமணியம் | 58,650 | 67,448 | 01.04.2021 to 31.03.2024 |
| 8 | மைசூர் டிரங்ரோடு ரங்கசமுத்திரம் சந்து 12 சந்திப்பு பகுதியில் மீன் இறைச்சி விற்பனை உரிமம் | 061/54 | டி. குமார் | 63,117 | 72,585 | 01.04.2021 to 31.03.2024 |
| 9 | கோபி ரோடு பகுதியில் மீன் இறைச்சி விற்பனை உரிமம் | 061/34 | கே. ரவி | 1,28,930 | 1,48,270 | 01.04.2021 to 31.03.2024 |
| 10 | கோட்டு வீராம்பாளையம் திருவள்ளுவர் திடல் பகுதியில் மீன் இறைச்சி விற்பனை உரிமம் | 061/35 | பி. கந்தசாமி | 28,750 | 33,063 | 01.04.2021 to 31.03.2024 |
| 11 | அத்தாணி ரோடு பகுதியில் மீன் இறைச்சி விற்பனை உரிமம் | 061/55 | டி. ஆனந்தன் | 55,816 | 64,189 | 01.04.2021 to 31.03.2024 |
| 12 | மைசூர்டிரங் ரோடு எஸ்.ஆர்.டி.கார்னர் பகுதியில் மீன் இறைச்சி விற்பனை உரிமம் | 061/75 | எஸ்.குமார் | 68,770 | 79,086 | 01.04.2021 to 31.03.2024 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 | நகராட்சி வாரச்சந்தையில் சந்தை நாட்களில் மட்டும் மாட்டு இறைச்சி விற்பனை உரிமம் | 061/38 | ஆர். ரமேஷ் | 16,215 | 18,648 | 01.04.2021 to 31.03.2024 |
| 14 | நகராட்சி வாரச்சந்தையில் சந்தை நாட்களில் மட்டும் மாட்டு இறைச்சி விற்பனை உரிமம் | 061/37 | ஆர். தர்மராஜ் | 16,215 | 18,648 | 01.04.2021 to 31.03.2024 |
| 15 | நகராட்சி வாரச்சந்தையில் சந்தை நாட்களில் மட்டும் மாட்டு இறைச்சி விற்பனை உரிமம் | 061/39 | ஆர். ரத்தினசாமி | 16,215 | 18,648 | 01.04.2021 to 31.03.2024 |
| 16 | தோப்பூர் காலனி வார்டு எண். 16 பகுதியில் மாட்டு இறைச்சி விற்பனை உரிமம் | 061/47 | ஏ. பாபு | 28,750 | 33,063 | 01.04.2021 to 31.03.2024 |

அலுவலகக்குறிப்பு : -

மேற்கண்ட கடை இனம் வரும் 31.03.2021 ஆம் தேதியுடன் முடிவடைவதையொட்டி, மேலும் அரசாணை எண். 92-ன்படி உரிய உரிம கட்டணம் மற்றும் ஆண்டு வாடகை முன் வைப்புத் தொகையாக பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட 16 இறைச்சி இன உரிமத்திற்கு அரசாணை எண். 92ன்படி நிபந்தனைகளுக்குட்பட்டு மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் நீடிப்பு செய்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 472 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 7

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடை இனத்திற்கு வரும் 30.11.2020, 31.12.2020, 31.01,2021 ஆகிய தேதியுடன் உரிமம் காலம் முடிவடைவதால் அரசாணை எண். ( நிலை) 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( ந.நி.4) துறை நாள்.03.07.2007 ன்படி மேலும் நீடித்து கொள்வது குறித்து விருப்ப படிவம் பெறப்பட்டது. அதன்படி உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன்வைப்புத் தொகைகள் பெறப்பட்டதை தொடர்ந்து நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் 01.12.2020, 01.01.2021, 01.02.2021 ஆம் தேதிகளிலிருந்து மூன்றாண்டு முடிய அதே உரிமைதாரருக்கு நீடிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | விதிப்பு எண் | கடை ஏல உரிமதாரர் பெயர் | பழைய மாத வாடகை | 15% உயர்வு செய்த பின் மாத வாடகை | நீடிப்பு செய்து வழங்கும் வாடகை காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலைய கடை | 42 | 061/4049 | எம். சகிலாபானு | 8,165 | 9,390 | 01.12.2020 to 31.11.2023 |
| 2 | புதிய பேருந்து நிலைய கடை | 44 | 061/4054 | ரமணிகாந்த் | 5,600 | 6,440 | 01.02.2021 to 31.01.2024 |
| 3 | வாரச்சந்தை வணிக வளாகம் | 24 | 061/4125 | சி.பிரகாஷ்பாபு | 6,000 | 6,900 | 01.01.2021 to 31.12.2023 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | வாரச்சந்தை வணிக வளாகம் | 25 | 061/4126 | பி. முத்துலட்சுமி | 6,000 | 6,900 | 01.01.2021 to 31.12.2023 |
| 5 | வாரச்சந்தை வணிக வளாகம் | 26 | 061/4127 | பி. முத்துலட்சுமி | 6,900 | 7,935 | 01.02.2021 to 31.01.2024 |

அலுவலகக்குறிப்பு :

மேற்கண்ட கடை இனம் வரும் 30.11.2020, 31.12.2020, 31.01.2021 ஆகிய தேதியுடன் முடிவடைவதையொட்டி, மேலும் அரசாணை எண்.29ன்படி உரிய உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன் வைப்புத் தொகைகள் பெறப்பட்டது. எனவே மேற்கண்ட கடைகளுக்கு அரசாணை எண். 92-ன்படி நிபந்தனைகளுக்குட்பட்டு மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் நீடிப்பு செய்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 473 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் வாகனம் எண் TN36AQ4510- க்கு தகுதிச் சான்று வருகின்ற 15.01.2021 தேதியுடன் முடிவடைவதால் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கி சரி செய்து தகுதிச் சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.30,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பழுது விபரம் |
|---|---|
| 1 | கம்ப்ளீட் வாட்டர் சர்வீஸ் செய்தல் |
| 2 | கம்ப்ளீட் எலக்ட்ரிகல் செக்கப் பழுதடைந்த ஓயர் மாற்றுதல் |
| 3 | கம்ப்ளீட் இரண்டு கோட் பெயிண்ட அடித்து எண்கள் எழுத்துக்கள் எழுதுதல். |
| 4 | வேகக்கட்டுப்பாட்டு கருவி, எப்சி, ஸ்டிக்கர், புகை பரிசோதனை சான்று, 2 வருட தகுதிச்சான்று பெற்றுத் தருதல். |

அலுவலக குறிப்பு:

1. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 1454/2018/எச்1 )

தீர்மானம் எண் : 474 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 9

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட திரு. V.S.Perumal S/o Subramani Thudan Salai,Ikkarai Thanthapalli Village Sathyamangalam Taluk எனபவர்கள் சுப்பிரமணி மகன் வி.எஸ்.பெருமாள் -1,கே.சி.சுப்பிரமணியம் மகன் எஸ்.பிரகாஷ் - 2, காளியப்பகவுண்டர் மகன் சரவணன்-3, தவசிப்பன் மகன் கிருஷ்ணமூர்த்தி-4 என்பவர்கள் சத்தியமங்கலம் வட்டம்,சத்தியமங்கலம் உள்வட்டம்,மலையடிபுதூர் கிராமம் ரீ.ச.83/3A,3A காலையில் தங்களுக்கு பாத்தியப்பட்ட திறந்தவெளி கிணற்றிலிருந்து மின் மோட்டார் மூலம் தண்ணீரை இறவை செய்து மேற்படி வட்டம் சத்தியமங்கலம் வட்டம் கொண்டப்பநாயக்கன்பாளையம் கிராமம் ரீ.ச.எண்.6/1,7/1,7/2,7/3,7/4,8/1,2B,18/1 மற்றும் 18/2 காலைகளில் தங்களுக்கு பாத்தியப்பட்ட சுமார் 16.81 1/2 ஏக்கர் பரப்பளவுள்ள பூமிக்கு விவசாய பயன்பாடு மற்றும் கால்நடைகளின் குடிநீர் தேவையினை பூர்த்தி மேற்படியார்கள் பாதை வரி அனுமதி கோரி வரப்பெற்ற விண்ணப்பம் நகர் மன்றத்தின் பார்வைக்கும்,அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க.எண். 267/2020/E1)

தீர்மானம் எண் : 475 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 10

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் வடகிழக்கு பருவமழை கடந்த பத்து நாட்களில் அதிகளவில் மழை பெய்துள்ளது.மேலும்,பிரதான தேசிய நெடுஞ்சாலையின் கடை வீதி சாலை பாதாள சாக்கடை பணிக்காக மூடப்பட்டதால் அனைத்து கனரக வாகனங்கள் இச்சாலையில் செல்கின்றன.அதிக மழை பொழிவினால் திப்பு சுல்தான் சாலையில் மழை நீர் தேங்கி சாலையில் குண்டும் குழியுமாக உள்ளது.இரவு நேரங்களில் குழியில் தேங்கியிருக்கும் மழை நீரால் இரண்டு சக்கர வாகனங்கள் அடிக்கடி விபத்து ஏற்பட்டு வருகிறது. மேலும், குழந்தைகள், பெண்கள் சாலையை கடக்கும் போது தவறி குழியில் விழுந்துவிடுகிறார்கள்.கனரக வாகனங்கள் சாலையை கடக்கும் போது வாகனம் சாலையில் உள்ள சேற்றில் சிக்கிவிடுகிறது. இச்சாலையில் சாலை போக்குவரத்து மிகவும் மோசமாகவுள்ளது என்று அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் அடிக்கடி புகார்கள் வந்த வண்ணம் உள்ளது.போக்குவரத்து காவல் துறையினர் மீண்டும் மீண்டும் புகார்கள் தெரிவித்து கொண்டே உள்ளார்கள்.மேலும்,கடந்த 21.11.2020 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.இதில் மேற்கண்ட திப்பு சுல்தான் சாலையில் தார் பேட்ச் பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டது.எனவே, இப்பொருள் மீது சிறப்பு கவனம் ஈர்க்கும் பொருட்டு திப்புசுல்தான் சாலையில் தார் பேட்ச் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.9.60 இலட்சம் தேவைப்படுகிறது. மேலும்,இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: -

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 476 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 11

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பணிக்குத் தேவையான தளவாட சாமான்கள் 2020-2021 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட விவரப்படி வாங்கி வழங்கவும் பொருட்களை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மண்வெட்டி பெரியது | 30 |
| 2 | மண்வெட்டி சிறியது | 30 |
| 3 | சவுல் | 20 |
| 4 | குப்பை அள்ளும் அலுமினிய குண்டா | 15 |
| 5 | டிச்சு கொக்கி | 75 |
| 6 | தடிமார் | 100 |
| 7 | மூங்கில் கை சீமார் | 100 |
| 8 | பிளாஸ்டிக் காரைச்சட்டி | 120 |
| 9 | பல்லு கொத்து பெரியது | 20 |
| 10 | பல்லு கொத்து சிறியது | 60 |
| 11 | மூங்கில் கூடை பெரியது | 30 |
| 12 | மூங்கில் கூடை சிறியது | 30 |
| 13 | அருவாள் பெரியது | 15 |
| 14 | அருவாள் சிறியது | 15 |
| 15 | பிக்காஸ் | 6 |
| 16 | கடப்பாரை | 6 |
| 17 | மரம் அறுக்கும் இயந்திரம் | 1 |

அலுவலக குறிப்பு;

1. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் னுமதிக்கலாம்.

(ந. க. எண். 2711/2017/எச்1 )

தீர்மானம் எண் : 477 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 12

சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் டேங்கர் லாரி வாகனம் எண்.TN 36AZ 8821 வாகனத்தின் உள்ள 6 டயர்கள் மிகவும் தேய்ந்து விட்டதாகவும் இதனால் குடிநீர் டேங்கர் லாரி வாகனம் ஒட்ட மிகவும் கண்டினமாக உள்ளதாகவும், மேலும், டயர்கள் அடிக்கடி பஞ்சர் ஏற்பட்டு வருவதாகவும் வாகனத்திலுள்ள 6 டயர்கள் மாற்றி புதிதாக டயர்கள் வாங்கி தருமாறு திரு.எஸ.கே.பழனிசாமி வாகன ஒட்டுநர் தனது விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள். இப்பொருள் மீது சிறப்பு கவணம் ஈர்க்கும் பொருட்டு குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதி புதிதாக 6 டயர்கள் வாங்க உத்தேச செலவினம் ரூ.60000/- தேவைப்படுகிறது. மேலும்,இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டுஎண்.1265/2020/இ1)

தீர்மானம் எண் : 478 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 13

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண். 3 பிரிட்டோ காலணி 1985 ஆம் ஆண்டு முதல் வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறோம்.இப்பகுதியிலுள்ள ரோடுகள் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.இங்குள்ள அனைத்து வீடுகளும் முறையே அனுமதி பெற்று குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.நீண்ட நாட்களாக இப்பகுதிக்கு சாக்கடை வசதிகள் இல்லாததால் மழைக்காலங்களில் மழை நீர் தேக்கி மக்களுக்கு மிகவும் கஷ்டத்தை கொடுத்து வருகிறது.இதனால் நோய்கள் பரவ அபயாம் உள்ளதாகவும்,மேலும்,கழிவு நீர் சாலையில் தேங்கி சாலை சேதம் ஆகிவிடுகிறது.இதனை தடுக்கும் பொருட்டு அவசரஅவசியம் கருதி புதிதாக மழை நீா வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை மனு வழங்கியுள்ளார்கள்.மனு நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.இதற்கு உத்தேச ரூ.3.50 இலட்சம் ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண்.100/2020/இ1)

தீர்மானம் எண் : 479 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 14

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.1 எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் சுமார் 40 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள்.இப்பகுதியில் அதிகளவில் பெண்கள் கூலி வேலைகளுக்கு சென்று விடுவதால் அவர்களுக்கு சமைக்க குடிப்பிதற்கும் வெகு தொலைவில் இருந்து குடம் குடமாக இரு சக்கர வாகனத்தில் வைத்து குடிநீர் எடுத்து தேவைக்காக நீண்ட துாரம் செல்வதால் அவர்களின் நலன் கருதியும்,மேலும்,இப்பகுதியில் உள்ள முதியோர்களும் பல கஷ்டங்கள் அனுபவித்து வருகிறார்கள் என்று அப்பகுதி ஊர் பொதுமக்கள் மற்றும் திரு.மு.அருணாசலம் முன்னால் நகர் மன்ற உறுப்பினர் அவர்களின் விண்ணபத்தில் தெரிவித்துள்ளார்கள்.இக்கடிதம் நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.இப்பகுதியில் புதிதாக குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்ய உத்தேச தொகை ரூ.1.80 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கும்,ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2) இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு திட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந.க.எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 480 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 15

கடந்த 21.11.2020 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களால் நகராட்சி பகுதிகளில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட ஆய்வின் போது சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பெரியகுளம் மற்றும் திப்புசுல்தான் சாலை மற்றும் போயர் வீதி சந்திப்பில் ஏற்கனவே உள்ள சிறுபாலம் சிறிய அளவில் உள்ளதால் மழை நீர் வடிகாலில் மழை நீர் தேங்கி சாக்கடை அடைப்பு ஏற்பட்டு வருகிறது. அப்பகுதி பொதுமக்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் புகார்கள் தெரிவித்துள்ளார்கள்.மேற்கண்ட மழை நீர் வடிகால் அடிக்கடி சுத்தம் செய்யப்பட்ட நிலையிலும் சிறுபாலம் மிகவும் குறுகலாக உள்ளதால் சாலை சந்திப்புகளில் புதிதாக சிறுபாலம் அமைக்கப்பட்டு கழிவு நீர் தங்கு தடையின்றி செல்ல உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். இப்பொருள் மீது சிறப்பு கவனம் ஈர்க்கும் பொருட்டு பெரியகுளம் சாலை திப்புசுல்தான் சாலை சந்திப்பு மற்றும் போயர் வீதி சந்திப்பில் புதிதாக சிறுபாலம் அமைக்க உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சம் ஆகும். மேலும்,இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 481 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 16

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண். 9 கிட்டையா காலணி அமைக்கப்பட்டு பல வருடங்களாக குடியிருந்து வருகிறோம்.இப்பகுதியிலுள்ள ரோடுகள் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.இங்குள்ள அனைத்து வீடுகளும் முறையே அனுமதி பெற்று குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.நீண்ட நாட்களாக இப்பகுதிக்கு சாக்கடை வசதிகள் இல்லாததால் மழைக்காலங்களில் மழை நீர் தேக்கி மக்களுக்கு மிகவும் கஷ்டத்தை கொடுத்து வருகிறது. இதனால் நோய்கள் பருவ அபயாம் உள்ளதாகவும்,மேலும்,கழிவு நீர் சாலையில் தேங்கி சாலை சேதம் ஆகிவிடுகிறது.இதனை தடுக்கும் பொருட்டு அவசரஅவசியம் கருதி புதிதாக மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை மனு வழங்கியுள்ளார்கள்.மனு நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.இதற்கு உத்தேச ரூ.4.80 இலட்சம் ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 482 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 17

சத்தியமங்கலம் நகராட்சியில் முதல் மற்றும் இரண்டாம் குடிநீர் திட்டம் செயல்படுத்தி சுமார் 40 வருடங்களுக்கு மேலாகி விட்டதாலும், இந்நகர் பகுதிகளில் அதிக இடங்களில் பகிர்மான குழாய்கள் பழுதுகள் ஏற்பட்டு தனியார் குடிநீர் குழாய் இணைப்பில் சரியாக தண்ணீர் வருவது இல்லை என்று பல புகார்கள் வந்த வண்ணம் உள்ளது.தற்பொழுது சத்தியா தியேட்டர் ரோடு பகுதியில் உள்ள பொதுமக்கள் கடந்த பல மாதங்களாக தண்ணீர் சரியாக வருவதில்லை என்று புகார் அளிக்கப்பட்டுள்ளன இம்மனு நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. தற்பொழுது பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் குழாய் மற்றும் ஆள் இறங்கிகள் பொருத்தும் பணி நடைபெற்று வருவதால்.இச்சாலையில் உள்ள பழைய பகிர்மான குழாய்கள் அகற்றிவிட்டு புதிதாக குடிநீர் குழாய்கள் பொருத்த நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.இதற்கு உத்தேச செலவின தொகை ரூ.2.50 இலட்சம் ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.
தீர்மானம் எண் : 483 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

**பொருள் : 18**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட திருவள்ளுவர் திடலில் அமைந்துள்ள நுண் உயிரி மையத்தில் உள்ள தொட்டிகளில் கொட்டப்படும் குப்பைகளிருந்து வெளியேறும் கழிவு நீர் அங்கேயே தங்கி விடுவதால் அதிகளவில் துர்நாற்றம் வீசிவருகிறது.இதனால் குப்பைகள் சுழற்ச்சி செய்யும் பணிகள் அதிகளவில் பாதிக்கப்படுகிறது. மேலும்,தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் வழிகாட்டுதலில் நுண் உயரி மைய வளாகத்தில் மாசுப்படுவதை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என்று சுட்டிகாட்டப்பட்டுள்ளது.எனவே,நகராட்சி ஆணையர் அவர்களின் ஆய்வில் குப்பை கொட்டும் தொட்டியில் கழிவு நீர் தனியாக பிரித்து குழாய்கள் மூலம் வெளியேற்று மாறு தெரிவித்துள்ளார்கள்.மேலும்,இது போன்ற கட்டமைப்புகள் நகராட்சி குப்பை கிடங்கில் அமைந்துள்ள நுண் உயிரி மையத்திலும் அமைக்குமாறு அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள்.எனவே,இரண்டு நுண் உயிரி மையத்தில் கழிவு நீர் பாதை அமைக்கும் பணிக்கு உத்தேசமாக ரூ.3.00 இலட்சம் தேவைப்படுகிறது.இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)இச்செலவினம் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 484 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

**பொருள் : 19**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ரங்கசமுத்திரம் தலைமை நீரேற்று நிலையத்தின் மின் இணைப்பில் உள்ள மீட்டர் பாக்ஸ் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வழிக்காட்டுதலின் அடிப்படையில் இல்லை என்றும் இந்த மீட்டர் பாக்ஸ் மற்றும் பேனல் போர்டு உடனே மாற்றம் செய்யதிட வேண்டும் என்று மின் அளவீடு செய்யும் போது உதவி மின் பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும்,நிலையத்தில் உள்ள UG Aluminum Cable,Cable Gland,Main switch and fuse carrier,56 to 100 KWA capacity LTCT metering Box ஆகியவைகள் பொருத்தி தருமாறு தலைமை நீரேற்று நிலைய பணியாளர் திரு.எல்.சக்திவேல் அவர்களின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள்.எனவே,குடிநீர் அவசர அவசியம் கருதி இப்பணிகள் செயல்படுத்தும் பொருட்டு உத்தேசமாக செலவின தொகை ரூ.2.20 இலட்சம் ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.
தீர்மானம் எண் : 485 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

**பொருள் : 20**

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20452/2020/எல்.எ.3 நாள்.10.11.2020 இன்படி 15 வது மத்திய நிதி குழு ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 2020-2021 ஆம் ஆண்டு மில்லியன்கள் அல்லாத நகரங்களுக்கு மானியம் வழங்கப்பட்டது."Tied Grant to Non-Million Plus Cities" முதல் தவணையாக திட்ட நிதி ரூ.66,64,752.00 ஒதுக்கீடு செய்யப்பட்டது.இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு வழிகாட்டுதல் வழங்கியுள்ளார்கள்.இதில் ஊதிய செலவினங்கள் தவிர குடிநீர் வசதிகள்,திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு நிதியை பயன்படுத்திக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. இவ்வாணை நகர் மன்றத்தின் பார்வைக்கு

வைக்கப்படுகிறது. மத்திய அரசு திட்ட நிதியை பயன்படுத்தி கொள்ளும் பொருட்டு கீழ்கண்ட பணிகள் எடுத்துக்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | Name of the work | Total No | Estimate Amount Rs.in Lakhs |
|---|---|---|---|
| 1 | Construction of Windrows platform with shed at Compost yard in Sathyamangalam Municipality | 1 | Rs.40.00 |
| 2 | Construction of Resource Recovery Centre at near Jeeva Shed in Sathyamangalam Municipality | 1 | Rs.20.00 |
| 3 | Purchase of Battery Operated Vehicles for Solid Waste Management in Sathyamangalam Municipality | 5 | Rs.10.00 |
| | Total | | Rs.70.00 |

மேற்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண்.1356/2020/இ1)

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இத்திட்ட நிதி போக கூடுதல் செலவினம் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.
3)இத்திட்டத்திற்கு ஆகும் விளம்பர செலவுகள் வருவாய் நிதியில் பயன்படுத்திக்கொள்ளலாம், இதற்காக 2020-2021ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 486 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

பொருள் : 21

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண். 11 ராஜீவ் நகர் முதல் கொடிவேரி மெயின் ரோடு பாலம் சந்திப்பில் நீண்ட நாட்களாக இப்பகுதிக்கு சாக்கடை வசதிகள் இல்லாததால் மழைக்காலங்களில் மழை நீர் தேங்கி மக்களுக்கு மிகவும் கஷ்டத்தினை கொடுத்து வருகிறது. இதனால் நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும்,மேலும்,கழிவு நீர் சாலையில் தேங்கி சாலை சேதம் ஆகிவிடுகிறது.இதனை தடுக்கும் பொருட்டு அவசரஅவசியம் கருதி புதிதாக மழை நீா வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை மனு வழங்கியுள்ளார்கள்.மனு நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.இதற்கு உத்தேச செலவினம் ரூ.7.30 இலட்சம் ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.
தீர்மானம் எண் : 487 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.11.2020

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.